சென்னையில் ஜவஹர்லால் நேரு சாலையில் பள்ளிக்கு அருகில் உள்ள மதுக்கடை எண்-690,703யை அகற்றக் கோரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 140-வது வட்டக்கிளையின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாநில செயற்குழு உறுப்பினர் பி.சேதுராமன், இந்திய மாதர் தேசிய சம்மேளத்தின் மாநிலத் தலைவர் ஆர்.சுசீலா, தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.ஏழுமலை உள்ளிட்டோரை காவல்துறையினர் கைது செய்தனர்.

# வெளிநாட்டுப் பல்கலை: மாணவர் பெருமன்றம் கண்டனம்

**சென்னை:** இந்தியா விற்குள், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களை அனுமதிக்கும் மத்திய அமைச்சரவை முடிவுக்கு அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் ம. வெங்கட்ராமன் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்தியாவில் வெளிநாட்டு பல்கலைக்கழங்களை அனுமதிக்க மத்திய அமைச்சரவை எடுத்திருக்கும் முடிவை அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது. ஏற்கனவே கல்வித் துறை தனியார் வசமாகி கடைச் சரக்குகளைப் போல நாடு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை கொண்டுவர மத்திய அமைச்சரவை எடுத்துள்ள இந்த முடிவு மேலும் கல்வியை கூறுபோட்டு விற்பனை செய்கின்ற செயலாக மாறிவிடும்.

ஏற்கனவே கல்வி தனியார் வசம்உள்ள காரணத்தால் ஏழை எளிய மக்களுக்கு எட்டாக் கனியாக உள்ளது. இதில் வெளி நாட்டு பல்கலைகழகத்தின் வருகையால் இந்திய நாட்டின் ஏழை எளிய மக்களுக்கு கல்வி என்பது அவர்கள் கனவில் கூட நினைத்துப்பார்க்க முடியாத ஒன்றாக மாறிவிடும் அபாயம் உள்ளது.

இப்பல்கலைக் கழகங்களில் எவ்வித இடஒதுக்கீடும் இருக்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் மட்டும் பயிற்று மொழியாக இருக்கும். இதனால் தமிழ் உள்ளிட்ட அனைத்து இன மக்களின் தாய்மொழியும் நிராகரிக்கப்படும். கல்வியின் தரம் கடுமையாக பாதிக்கும். கட்டணம் பல மடங்கு உயர்த்தப்படும். மற்ற அரசு பல்கலைக் கழகங்களிலும் கட்டண உயர்விற்கு நிர்ப்பந்திக்கப் படும். இனம், மொழி, பண்பாடு, வட்டாரத் தன்மை உள்ளிட்ட அனைத்து பன்மைத் தன்மையும் சிரழிக்கப்படும். இது மீண்டும் இந்தியா வை மறுகாலனியாக்கும் முயற்சி யாகும்.

எனவே மத்திய அரசின் இந்த முடிவை எதிர்த்து கடுமையாக போராட அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் முடிவு செய்துள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் ஆதரவு தர வேண்டு கிறோம். மத்திய அரசு இந்த முடிவை திரும்பப்பெறவேண்டும். என அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் வலுயுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

# கேரள எல்லைகளில் முற்றுகை

## மதிமுக தீர்மானம்

**சென்னை:** தமிழக நதிநீர் உரிமைகளை மறுக்கும் கேரள மாநிலத்துக்குச் செல்லும் எல்லைகளை வரும் மே மாதம் 28ம் தேதி முற்றுகையிட்டு போவதாக மதிமுக தீர்மானம் இயற்றி யுள்ளது.

மதிமுகவின் மாவட்டச் செயலாளர்கள்,ஆட்சிமன்றக் குழு, அரசியல் ஆலோசனைக் குழு, அரசியல் ஆய்வுமைய உறுப்பினர்கள் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. அதில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களின் விபரம் வருமாறு.

தமிழகத்தின் நதிநீர் வாழ்வாதாரங்கள் அனைத்தையும் கேரள மாநிலம் பறித்து வருகிறது. நெல்லை மாவட்டம், செண்பகவல்லி தடுப்பு அணைச் சுவரில் ஏற்பட்ட பழுதை சரிபார்ப்பு பதற்கு தமிழகத்தை கேரளம் அனுமதிக்கவில்லை. குமரி மாவட்டத்தில் நெய்யாற்றில் வந்து கொண்டு இருந்த தண்ணீரை கேரளம் தடுத்து நிறுத்தியுள்ளது. கொங்கு மண்டலத்தில் பாம்பாற்றுக்குக் குறுக்கே புதிய அணை கட்ட கேரளம் முயற்சித்து வருகிறது.

தமிழகத்துக்கு 999 ஆண்டுகள் உரிமைகள் உள்ள முல்லைப் பெரியாறில், தற்போது இருக்கின்ற அணையைப் பல மீனப்படுத்தி உடைப் பதற்காக புதிய அணையை கட்டப்போவதாக கேரளம் கூறி வருகிறது. தற்போது இருக்கிற அணையை விடப் பள்ளத்தில் கட்டப்போகும் அணையில் இருந்து, அவர் கள் நினைத்தாலும் தமிழகத் துக்குத் தண்ணீர் தர முடியாது.

எனவே, தமிழகத்துக்கு வருகிற தண்ணீரை மறித் தால், தமிழகத்தில் இருந்து கேரளத்துக்குச் செல்லுகின்ற பொருள்களைக் கொண்டு செல்வதை தடுப்போம்; நிரந் தரப் பொருளாதார முற்று கைக்கு ஆளாகாதீர் கள் என கேரள அரசை எச்சரிக் கும் வகையில் வரும் மே மாதம் 28ம் தேதி தமிழ் நாட்டில் இருந்து கேரளாவுக்குச் செல்லும் அனைத்து சாலைகளையும் மறிக்க மதிமுக முடிவு செய் துள்ளது.

மற்றொரு தீர்மானத்தில் மின் உற்பத்தியை பெருக் காமல் தமிழகத்தை இருளில் தள்ளிய, திமுக அரசைக் கண்டிக்கின்ற வகையில், அனைத்து மாவட்டத் தலை நகரங்களிலும் வரும் ஏப்ரல் 7ம் தேதி கண்டன ஆர்ப் பாட்டம் நடத்தப் படும் என கூறப்பட் டுள்ளது.

# ஒருமைப் பல்கலைக் கழகங்களுக்கு எதிராக கல்லூரி ஆசிரியர்கள் உண்ணாவிரதம்

**சென்னை :** பல்கலைக் கழக ஆசிரியர்கள் போ ராட்டத்தை ஆதரித்து மாணவர்கள் போராடு வார்கள் என்றும் கல்விக் காக அனைத் திந்திய மாணவர் பெரு மன்றம் போராடும் என்றும் அனைத்திந்திய மாணவர் பெருமன்ற முன்னாள் மாநில செயலாளர் இரா.திருமலை கூறினார்.

சென்னையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளை பல்கலைக் கழகங்களாக மாற்றும் முடிவினைக் கண்டித்து கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கை குழு சார்பாக நடைபெறும் உண்ணா விரதத்திற்கு தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத் தின் மாநிலத் தலைவர் கே.ஜி.பழனி தலைமை தாங்கினார். இதில் கலந்து கொண்டு வாழ்த்திப்பேசிய அனைத்திந்திய மாணவர் பெருமன்ற முன்னாள் மாநிலச் செயலாளர் இரா.திருமலை பேசிய தாவது:

ஏழை எளிய மாணவர் களின் உயர்கல்வி வாய்ப் பினை நிரந்தரமாகப் பறிக்கக்கூடிய சமூக நீதிக்கு எதிரான, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளை ஒருமை வகைப் பல்கலைக் கழகங் களாக உருமாற்றிடும் முடி வினைக் கைவிடக் கோரி தமிழக அரசை வலியுறுத்தி நடைபெறும் இந்த உண்ணாவிரதப் போ ராட்டம் என்பது நியாயமானதாகும்.

ஆயைால்தான் இந்த கோரிக்கை போராட்டத் தில் தமிழ்நாடு முழுவதும் 16 மையங்களில் மாணவர் பெருமன்றத் தோழர்கள் பங்கேற்றனர்.

அரசு கல்லூரிகள் எல்லாம் தனியார்மயமாவது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் வேளை யில் இப்போது வெளி நாட்டு பல்லைகழகங்கள் இந்தியா வில் தொடங்கப் பட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அறிவித்துள்ளது. இதனை கண்டித்தும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளை ஒருமை வகைப் பல்கலைக் கழகங் களாக மாற்றும் முடி வினைக் கண்டித்தும் தமிழ் நாடு முழுவதும் உள்ள மாணவர்களைத் திரட்டிப் போராடுவோம் என்று அவர் கூறினார்.

இந்த உண்ணாவிரதத் தில் உதவி பெறும் கல்லூரி களின் அலுவலர் சங்கத்தின் சார்பாக இளம்வாரன்ஸ் மற்றும் மத்திய அரசு ஊழியர் சம்மேளனத்தின் தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் துரை பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பெரம்பூர் மேம்பாலப் பணிகள்

## மேயர் மா.சுப்பிரமணியன் ஆய்வு

**சென்னை:** சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டு வரும் பெரம்பூர் மேம்பாலம் இறுதிகட்டப் பணிகளை மேயர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டு ஆய்வு செய்துபின் செய்தியாளர் களிடம் பேசினார். அப் போது அவர் கூறியதவாது:

தமிழக துணை முதல்வர் முகஸ்டாலின் பெரம்பூர் மேம்பாலப் பணிகளை அவ்வப்போது பார்வை யிட்டு துரிதப்படுத்தினார். தமிழக முதலமைச்சர் கருணாநிதி வருகிற 28ஆம் தேதி பெரம்பூர் மேம் பாலத்தை திறந்து வைக் கிறார்கள்.

துணை முதலமைச்சர் முகஸ்டாலின் மேயராக இருந்தபோது ரூ 21 கோடி செலவில் பெரம்பூர் மேம் பாலப் பணி தொடங்கப் பட்டது. பின்னர் வந்த ஆட்சியாளர்கள் பெரம்பூர் மேம்பாலப் பணியினைக் கைவிட்டனர்.

2006ம் ஆண்டு மீண்டும் தலைவர் கலைஞர் ஆட்சி யில் பெரம்பூர் மேம்பாலப் பணி தொடங்கப்பட்டது. ஆனால் 40 மீட்டர் அழுத் திலும் கடினப் பாறை கிடைக்காததால் பணி நிறுத்தப்பட்டு, மாற்று வடி வமைப்பு பெறப்பட்டது. அதன்படி ரூ. 51 கோடி செலவில் பெரம்பூர் மேம் பாலப் பணி தொடங் கப்பட்டு, இறுதி கட்டப் பணிகள் முடியும் தரு வாயில் உள்ளது. பாலத்தின் மீது வீண்ம் பூகம் பணிகள், சர்வீஸ் சாலைகளில் தார்ச் சாலை அமைக்கும் பணிகள், பூங்காப்பணிகள் நடை பெற்று வருகிறது.

இம்மேம்பாலம் மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி 5.25 மீட்டர் அகலம் கொண்ட ஒரு வழிப்பாதை இரண்டாவது பகுதி 13 மீட்டர் அகலம் கொண்ட மூன்று வழிப் பாதை மூன்றா வது பகுதி 15.25 மீட்டர் கொண்ட நான்கு வழிப் பாதை ஆகும் இம்மேம் பாலப்பணி ரயில்வே பகுதி உட்பட அனைத்து பணி களும் 21 மாதங்களில் குறித்த காலத்திற்குள் முடிக்கப் பட்டுள்ளன. இம்மேம் பாலப்பணி காரணமாக வடசென்னையின் முக்கிய பகுதிகளான பெரம்பூர், அயனாவரம், புரசைவாக்கம், பெரியார்நகர், செம்பியம், திருவிகநகர், கொளத்தூர், செங்குன்றம், மூலக்கடை, மாதவரம், வியாசர்பாடி, மற்றும் கொடுங்கையூர் பகுதியும் மக்கள் பெரிதும் பயன்

அ டை வ ா ர் க ள் . இப்பாலத்தினால், சுமார் 25 ஆயிரம் வாகன ஓட்டி கள் பயன் அடைவார்கள். பெரம்பூர் பாலத்தின் வடக்கு தெற்கு பகுதிகளில் அமுகிய பூங்காப் பணிகள் ரூபாய் 70 லட்சம் செலவில் நடைபெற்று வருகின்றன. சர்வீஸ் சாலை உட்பட

இப்பாலத்தின்மீது 150 தெருவிளக்குகள் மற்றும் இரண்டு உயர்கோபுர விளக்குகள் மொத்தம் ரூபாய் 87 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது தலைமைப் பொறியாளர் விஜயகுமார், மேற்பார்வை பொறியாளர் இராமமூர்த்தி, மன்ற உறுப்பினர் துரை ராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

# ராஜபாளையத்தில் ரயில்வே மேம்பாலம் உடனடியாகக் கட்டப்பட வேண்டும்

## பெ.லிங்கம், எம்.பி கோரிக்கை

**தென்காசி:** ராஜபாளை யத்தில் உடனடியாக ரயில் வே மேம்பாலம் கட்டப்பட வேண்டும் என பொ. லிங்கம்,எம்பி, கோரிக்கை வைத்துள்ளார்.

தென்காசி தொகுதியில் உள்ள ராஜபாளையம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேரை மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. பஞ்சாலை கள், கைத்தறி நெசவாலை கள் மற்றும் ஆலைகளுக்கு ஒரு சிமெண்ட் ஆலை என இது ஒரு தொழிற்சாலைகள் நிறைந்த நகரமாகவும் உள்ளது. மாம்பழம் விளை வித்தல் போன்ற விவசாயத் தொழிலும் இங்கு நடை பெறுகின்றது.

இந்த நகரத்தின் கிழக்கு மேற்கும் வடக்குப் பக்கத்தில் 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு இருக்கும் ஒரே சாலை பிஏசிஆர் சாலைதான். இந்த சாலையிலிருக்கும் பக்கத்தில் தான் எண்ணற்ற மருத்துவ மனைகள், கல்விநிலை யங்கள், மருத்துவ பரிசோ தனைக் கூடங்கள் மற்றும் தொழிற்கூடங்கள் உள்ளன. இந்தச் சாலையின் வழியா கத்தான் அத்தியாவியப் பொருட்களும், பள்ளி மாணவர்களும் தினமும் செல்லவேண்டும். இந்த பிஏசிஆர் சாலையில் உள்ள ரெயில்வே லெவல் கிராசிங்கால் (எண்.449, 591/ 100க்கும் 592/0க்கும் இடையில் உள்ளது) மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளா கின்றனர். நோயாளி கள் உரிய நேரத்தில் மருத்துவ மனைக்குச் செல்ல முடிவ தில்லை. பல சமயங்களில் உயிரிழப்புக்கள் கூட ஏற்படு கின்றது. பல மணி நேரங் களுக்கு லெவல் கிராசிங் மூடியிருப்பதால் வேலை லெவல் கிராசிங் கில் மேலும் தாமதமின்றி உட னடியாக மேம்பாலம் கட்டப் பட வேண்டும் என பாராளு மன்றத்தில் விதி 377ன் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் பொ.லிங்கம் கோரிக்கை எழுப்பியுள்ளார்.

# தமிழ்த்தென்றல் 6வது ஆண்டு விழா

**சென்னை:** பத்திரிகை யாளர்களுக்காக நடத்தப் பட்டுவரும் தமிழ்த்தென்றல் 6வது ஆண்டு விழா சென்னை தேவதேசப் பாவாணர் நூலகத்தில் நடைபெற்றது.

தமிழ்த்தென்றல் ஆசிரி யரும், தமிழ்நாடு பத்திரிகை யாளர் சங்கத்தின் மாநிலத் தலைவருமான டிஎஸ்வரீந்தி ரதாஸ் தலைமையில் நடை பெற்ற இந்த விழாவில் சென்னை மாவட்ட தலைவர் ஏ.ஜேசகாய ராஜ் வரவேற்புரை ஆற்றினார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கேவிதங்க பாலு, மேயர் மா.சுப்ர மணியன், தென்னிந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளன தலைவர் இயக்குநர் விசிகுகநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செகுதமிழரசன், திரைப்பட இயக்குநர் ஆர்.வி.உதயக்குமார், திரைப்பட தயாரிப்பாளர் எல்.எஸ்.ஜெயந்தி கண்ணப்பன், முல்லைச்சரம் ஆசிரியர் கவிஞர் பொன்ன தியான், டாக்டர் கிளம்கே. ரெட்டி, பழம்பெரும் திரைப் பட நடிகை குசலகுமாரி, மூத்த பத்திரிகையாளர் பி.ஏ.தாஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

மேயர் சுப்ரமணியன் வாழ்த்துரை நல்கி 10 ஆண்டுகளுக்கான தமிழ்த் தென்றல் சந்தா தொகை யினையும் வழங்கினார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கேவிதங்க பாலு சிறப்புரை ஆற்றி, தமிழ்த்தென்றல் பட்டயப் பாளிகளுக்கும், நிர்வாகி களுக்கும் பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு களை வழங்கி கௌரவித்து தார். மேலும் தமிழ்த் தென்றலின் ஆயுள் சந்தா வினை காசோலையாக வழங்குவதாக தெரிவித்தார்.

விழாவில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மாநிலங் களவையில் நிறைவேற்றப் பட்டது குறித்து மகிழ்ச்சி யும் நன்றியும் தெரிவிக்கப் பட்டது2006க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களும், வாசகர்களும் கலந்து கொண்ட இவ்விழாவில் இறுதியில் சென்னை மாவட்ட நாசர் வசிகரன் நன்றி கூறினார்.

## இன்றைய நிகழ்ச்சி

வ.உ.சி.யின் 'திலகமகரிஷி' நூல் வெளியீட்டு விழா
நேரம்: 17-03-2010, மாலை 6 மணி
இடம்: ஹோரட்டல், பாம்குரோவ் கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை
தலைமை: இ.சுந்தரமூர்த்தி முன்னாள் துணை வேந்தர்
நூல் வெளியிட்டு சிறப்புரை:
ஆர்.நல்லகண்ணு
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர்
வாழ்த்துரை: பெசுமணி, மே.துராசகுமார் ஏற்புரை: மா.ரா.அரசு
நன்றியுரை: இளங்கோ குமணன்

---

ஆட்டோ ஓட்டுனர் சாலை மறியல்
நாள்: 17-03-2010
இடம்: ஜெ.டி.சி. அலுவலகம், தெற்கு அசோக் நகர், அசோக் பில்லர் அருகில்
டாடா மேஜிக் வாகனம் ஷேர் ஆட்டோ போன்று இயங்குவதை தடுக்க காவல்துறை நடவடிக்கை எடுக்கக் கோரி
ஏஜடியுசி சென்னை மற்றும் புறநகர் ஷேர் ஆட்டோ தொழிலாளர் சங்கத்தினர் மறியல்
தலைமை: கே.தமிழ்ச்செல்வன்
மறியலை துவக்கி வைத்து வாழ்த்துரை:
ஏ.எம்.கோபு
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர்

# அண்ணாசாலை தலைமை அஞ்சலகத்தில் நேரடி குறைதீர்ப்பு முகாம்

**சென்னை:** அண்ணா சாலை தலைமை அஞ்ஞலம் மீதான புகார்களை தீர்த்து வைக்க நேரடி குறைதீர்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. இந்த முகாம் வரும் 26-ம் தேதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

வாடிக்கையாளர்கள் தங்கள் அனுப்பி வைத்த பதிவுத் தபால்கள், பார்சல் கள், மணியார்டர்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட குறைகளை தலைமை அஞ்சல் அதிகாரிக்கு தெரிவிக்கலாம். அந்த புகார் களில் கடிதம் அனுப்பிய தேதி, அலுவலகம், அனுப் புனர் மற்றும் பெறுநர் முகவரி, பதிவுத் தபால்கள், பார்சல்கள், மணியார்டர் கள் போன்றவற்றில் அனுப் பியவர் மற்றும் பெற்றுக் கொள்பவரின் முகவரி போன்ற தகவல்களுடன் புகார்களை அனுப்ப வேண்டும். சேமிப்பு வங்கிக் கணக்குகள் மற்றும் ரொக்க சான்றிதழ்கள் தொடர்பான புகார்களையும் வாடிக்கை யாளர்கள் அனுப்பி வைக் கலாம் என்று அண்ணா சாலை தலைமை அஞ்சல் அலுவலக தலைமை அஞ்சல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதே போல மற்ற மொறு குறைதீர்ப்பு முகாம் வட்டார அளவிலும் செங்கல்பட்டில் உள்ள தலைமை அஞ்சல் அலுவல கத்தில் இம்மாதம் 24-ம் தேதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. வாடிக் கையாளர்கள் தங்கள் புகார்களை 22-ம் தேதி வரை அனுப்பி வைக்கலாம்.

# ஆறு குழந்தைகள் நீரில் மூழ்கி சாவு: வைகோ இரங்கல்

**சென்னை:** நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் மேலநீதநல்லூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட மடத்துபட்டி கிராமத்தைச் சேர்ந்த ஆறு சிறுவர்கள், அவ்வூரின் மேற்கே அமைந்துள்ள குளத்தில் குளிக்கச் சென்று எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி இறந்துவிட்ட செய்தி பற்றி மதிமுக பொதுச்செயலாளர் வைகோ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:

சுமார் ஆறு வயது முதல் எட்டு வயது உடைய சிறு குழந்தைகளான செல்வராஜ், பிரேம்குமார், அருண்பாண்டி, கவுதம், கமல், சிவா ஆகியோரை இழந்து வாடும் பெற்றோருக்கும், ஊர்மக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறேன்.

முற்றிலும் சிறு விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும், விவசாயக் கூலித்தொழிலாளர் களாகவும் உள்ள, இறந்த குழந்தைகளின் பெற்றோருக்கு எவ்விதி நிவாரணமும் ஈடாகாது என்றாலும், அவர்களின் கண்ணீரில் பங்கு ஏற்பதுடன், எதிர்கால ஆதாரமாக விளங்கிய குழந்தைகளைப் பறிகொடுத்துத் தவிக்கும் குடும்பத்திற்குத் தலா மூன்று லட்ச ரூபாய் நிவாரண உதவியாக வழங்கிடுமாறு தமிழக அரசை வலியுறுத்து கிறேன். இவ்வாறு வைகோ அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

Janasakthi, Tamil daily, Published by A.M.GOPU and owned by on behalf of JANASAKTHI TRUST and published from by 43, Chevaliye Sivaji Ganesan salai, Thiyagaraya Nagar, Chennai-17. Phone:044-22502447/48, Fax:044-43534530, www.janasakthi.org, Editorial Email: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com, Printed by G.Durairaj at Pavai Printers (P)Ltd., 142, Jani Jan Khan Road, Royapettah, Chennai-14. **Editor: D.Pandian**